**அரசாங் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு**

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

**<u>இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2025</u>**

அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணியாளர் மேலான்மை என்ற தலைப்பில் அமப 25/0399/802/004-II ஆம் இலக்க மற்றும் 2025.03.10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் 219910 ஆம் இலக்க 2020.10.27 ஆம் திகதிய இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக ஆயுள்வேத திணைக்களத்தின் வைத்திய உத்தியோகத்தர் வகையின் ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர் பதவியில் நிலவும் 304 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது..

அதன் பிரகாரம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை 2025.06.24 ஆம் திகதியில் பூர்த்திசெய்யும், தகைமை பெற்றவர்களைத் தெரிவு செய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவின் பணிப்பின் பிரகாரம் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஆயுள்வேத ஆணையாளர் தலைமையதிபதி, ஆயுள்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி நாவின்ன, மகரகம. எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் ஆரம்ப தர வைத்திய உத்தியோகமத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2025" எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும் ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் பெயர்,சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்களால் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்களால் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2025.06.24 ஆம் திகதி ஆகும்.**

குறிப்பு – விண்ணப்ப படிவம் அல்லது அது தொடர்பாக கடிதம் தபாலில் தொலைந்ததாக அல்லது தாமதமானதாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்டபாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்ப படிவங்களை தாமதபடுத்துவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரர்கள் பொறுப்பேற்றல் வேண்டும்.

**01. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஆயுள்வேத/ சித்த/ யுனானிப் பட்டம் பெற்ற பட்டத்தாரிகள் ஏற்புடைய ஆண்டுகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் திறமைப் பட்டியலின் வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர். ஒன்று மேற்பட்ட வருடங்களில் உள்ள பட்டத்தாரிகள் விண்ணப்பதாரர்களாக முன்வரும் சந்தர்ப்பங்களில் அவ்அவ் வருடங்களின் திறமைப் பட்டியலை அடிப்படையாக் கொண்டு, அந்த திறமை பட்டியலில் குறிப்பிடபட்ட வரிசைக் கிரமத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படும். நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட சாதாரண நேர்முக தேர்வுசபை மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**02. ஆட்சேர்க்கப்படும் தரம் : இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் ஆரம்ப தரம்.**

**03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இந்த நியமனம் ஓய்வூதிய சம்பளத்துக்கு உரித்துடையது. உங்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

II. இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று ஆண்டுகால (03) தகுதிகாண் காலத்துக்கு உட்படுவதுடன் ஆரம்ப தர பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட பின்னர், இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் சேவை பிரமாண குறிப்பில்

காட்டப்படும் விதிகள் மற்றம் நிபந்தனைகளுக்கு அமைவாக பதவியுயர்த்தப்படுவார்கள்.

III. புதிதாக நியமனம் பெறுபவர்கள் அவர்களின் திறமை பட்டியலின் வரிசைக் கிரமத்தின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்களுக்கு இணைக்கப்படுவதுடன் ஆரம்ப நியமனத்தின் பிரகாரம் கடமைகளை பொறுப்பேற்கும் உத்தியோகத்தர்கள் தமது ஆரம்ப சேவை நிலையத்தில் மூன்றாண்டு கால (03) கட்டாய தகுதிகாண் காலம் நிறைவடையும் வரை கடமை புரிதல் வேண்டும். அக்கால எல்லைக்குள் இடமாற்றங்கள் எதிர்பார்க்கப்படக் கூடாது என்பதுடன் இக்கால எல்லைக்குள் இடமாற்றம் வழங்குவதங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், 2199/10 ஆம் இலக்க மற்றும் 2020 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடங்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அரசின் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் மற்றும் திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்பட்டுள்ளது.

04. **சம்பள அளவு திட்டம் :**

இப்பதவிக்கு ரூ.91,750-3X2,400-7X2420-2X2940-16X3900-ரூபாய் 184,170/- (SL-2-2025) மாதசம்பள அளவு உரித்தாகும்.

05. **வயதெல்லை:**

2025.06.24 இல்

ஆகக்குறைந்த வயதெல்லை : 22 வருடங்கள்

ஆகக் கூடிய வயதெல்லை : 45 வருடங்கள்

06. **தகைமைகள் :**

**I. கல்வித்தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுள்வேத/ சித்த/ யுனானி மருத்துவம் தொடர்பான ஐந்தாண்டு கால பட்டம் பெற்ற பின்னர் ஓராண்டு கால வைத்தியசாலை உள்ளக சேவைக்காலப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

II. **தொழில் தகைமைகள்** : இலங்கை ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழைப் பெற்றிருத்தல்.

III. **அனுபவம்** ஏற்புடையதாகாது

IV. **உடல் தகைமை** : ஒவ்வொரு அபேட்சகரும் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்குமான போதியளவு உடல் ரீதியான மற்றும் உளரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாக காணப்படல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை மற்றும் தேவையான உடலியல் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பதவிக்கு ஆட்சேர்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியில் அந்த தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

07. **அபேட்சகர்களின் அடையாளம் :**

எல்லா வகையிலும் பூர்த்தியான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அபேட்சகர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முக பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்பித்தல் வேண்டும். நேர்முக பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்கள் நேர்முக பரீட்சைக் குழுவினால் கோரப்படும் போது சமர்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தயாராக இருத்தல் வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்
II. விவரமான பட்டப் படிப்பு சான்றிதழ்
III. ஆயுள்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்
IV. பிரதேச செயலாளரால் இணை ஒப்பமிடப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்
V. தேசிய அடையாள அட்டை

08. சமர்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டள்ளது. விண்ணப்ப படிவம் 22x29 செ.மீ அளவுடைய A4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் இலக்கம் 01 முதல் இலக்கம் 07 வரையான விபரங்கள் முதலாவது பக்கத்திலும் இலக்கம் 08 முதல் இலக்கம் 10 வரையான விபரங்கள் இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கு ஏற்புடைய தகவல்கள் தனது கையொப்பத்தில் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்ப படிவங்கள் மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்ப படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். ஏற்புடைய விண்ணப்ப படிவத்தின் மாதிரியினை (www.ayurveda.gov.lk) என்ற இணையத்தின் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

09.பொய்யான தகவல்களை வழங்குதல்

நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் போலியானது என ஆட்சேர்க்கப்படுவதற்கு முன்னர் தெரிய வருமாயின் உங்களது அபேட்சகராண்மை அறிவித்தலின்றி இரத்து செய்யப்படும்.

அவ்வாறான போலியான தகவல் ஒன்று ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் தெரிய வருமாயின் அது தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு சேவையில் இருந்த நீக்குவத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுவதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவிற்குரியதாகும்.

11. இந்த அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

12. மேலும் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்களமொழி மூல ஆவணத்தில் குறிக்கப்பட்ட விபரம் முதன்மையானதாக கொள்ளப்படும்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவின் கட்டளைப் பிரகாரம்

வைத்திய அனில் ஜாசிங்க

செயலாளர்
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

2025.05.23

அலுவலக உபயோகத்திற்காக மட்டும் [ ]

**இலங்கை ஆயுள்வேத வைத்திய சேவையின் ஆயுள்வேத திணைக்களத்தின் வைத்திய உத்தியோகத்தர் வகையின் ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) முதலெழுத்துக்களுடன் இறுதி பெயர் (ஆங்கில பெரிய (கெப்பிடல்) எழுத்தில்)
   …………………………………………………………………………………………………..
   (ஆ) முதலெழுத்துக்களுடன் இறுதி பெயர் (சிங்களத்தில்/ தமிழில்)
   ……………………………………………………………………………………………………
   (அ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய (கெப்பிடல்)எழுத்தில்)
   ……………………………………………………………………………………………………
   (ஆ) ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்)
   ……………………………………………………………………………………………………
2. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய (கெப்பிடல்) எழுத்தில்)
   (கடிதம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்)
   ……………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………
   நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்)
   ……………………………………………………………………………………………………
   …………………………………………………………………………………………………….

   பிறந்த திகதி ஆண்டு [ ] மாதம் [ ] திகதி [ ]

   2025.06.24 இல் வயது ஆண்டுகள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]

3. பெண் /ஆண் பாலினம் பெண் [ ] ஆண் [ ]
   (ஏற்புடைய கூட்டில் x அடையாளமிடவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா விவாகமானவர் [ ] விவாகமாகாதவர் [ ]
   (ஏற்புடைய கூட்டில் x அடையாளமிடவும்)

5. இலங்கைப் பிரசையா என்பது பற்றி ……………………………………………………………

6. நிரந்தர வதிவிடம் உரித்தாகும்
   மாகாண சபை: ……………………..
   மாவட்டம்:……………………………
   பிரதேச செயலாளர் பிரிவு: ……………………………………………..

7. தேசிய அடையாள அட்டை இல
   [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

8. கல்வித் தகைமைகள்

பட்டம் தொடர்பான விபரம்

பீ.ஏ.எம்.எஸ்(BAMS) ☐ பீ.யு.எம்.எஸ்(BUMS) ☐ பீ.எஸ்.எம்.எஸ் (BSMS) ☐

(ஏற்புடைய கூட்டில் x அடையாளமிடவும்)

1. பல்கலைக்கழகம் …………………………………….
2. பட்டம் செல்லுபடியாகும் திகதி……………………….
3. வகுப்பு………………………………………………
4. பட்டத்தை பூர்த்தி செய்த மொழிமூலம்………………..
5. உள்ளக பயிற்சி பெற்ற ஆண்டு……………………….

9. ஆயுள்வேத வைத்திய சபையின் பதிவு தொடர்பான விபரம்

1.இலக்கம்………………………….

2.ஆண்டு……………………………

இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். நான் ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விபரம் உண்மைக்கு புறம்பானதென அல்லது பிழையானதென நியமன அதிகாரிக்கு தெரியவருமாயின் அதன் காரணமாக நான் அப்பதவிக்கு பொருத்தமற்றவராக கருதபடுவதற்கும், எந்தவொரு நட்டயீடும் செலுத்தப்படாமலும் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

………………….. ………………….

திகதி ஒப்பம்

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்.**

விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச கல்லூரி முதல்வர், சமாதான நீதிபதி, சத்தியபிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரி மற்றும் அரச நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் மூலம் உறுதிபடுத்தப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் …………………………………(முழு பெயர்) என்பவரை எனக்கு தனிப்பட்ட ரீதியில் தெரியும் எனவும் ………………………… ஆம் திகதி அவர் என் முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

……………………… …………………………….

திகதி ஒப்பம்

(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்)

விண்ணப்பதாரி அரச சேவையில் உள்ளவரெனில் திணைக்களத் தலைவரின் அறிக்கை

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானதெனவும் அவரின் பணிகள் மற்றும் நடத்தை ……………. எனவும் நான் உறுதிசெய்கின்றேன். அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும் விடுவிக்க முடியாது.

………………………… ………………………….

திகதி ஒப்பம்

(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்)